இருக்கின்றன. அதைப் போலவே பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் 14 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. இந்த தாரதம்மிய வித்தியாசத்தைப் போக்க பல கோரிக்கைகள் வரப்பெற்றிருந்தும், இந்த ஆண்டோடு மத்திய அரசின் உதவி முடிகின்ற காரணத்தால், அந்த முழுப் பொறுப்பையும் தமிழ் நாடு அரசே ஏற்றுக்கொள்ள இருப்பதால், 1974–75-ல் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இன்றைய தினம் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு உதவி நிறுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நிறுத்தப் படக் கூடாது என்ற பிரச்சினைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே பேசினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த ஊராட்சி ஒன்றியங்கள் இப்பொழுதுதான் பிரிக்கப்படுகின்ற காரணத்தாலும், இந்த நிதி உதவியை மத்திய அரசு நிறுத்துகின்ற காரணத்தாலும், அதிகமாக நிதி உதவி இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அவர்களிடம் வைத்திருக்கிறோம். ஆகையினால் அதற்குப் பிறகு அதைப்பற்றி அறிவிப்பு செய்யலாம்.

Conference of Municipal Chairmen

* 86. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to convene a Conference of Municipal Chairmen to discuss the subject of giving mcre powers to Municipalities; and

(*b*) if so, when the Conference is proposed to be convened?

நகராட்சித் தலைவர்களின் கூட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சிகளுக்கு மேலும் அதிக அதிகாரங்களை அளிப்பது குறித்து விவாதிக்க நகராட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அக்கூட்டத்தினை எப்போது கூட்டுவதாகத் திட்டமிடப் பட்டுள்ளது ?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் இடத்திலே பேசும்போது நகராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எந்தவிதமான அதிகாரங்கள் வேண்டுமென்று வரையறுக்க வேண்டும், ஆகவே அதைப்பற்றி ஒரு அதிகாரிகளைக் கொண்ட மாநாடு கூட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்று "இந்து" பத்திரிகையிலே 23—8—73 அன்று செய்தி வந்தது. ஆகவே அமைச்சர் அவர்கள் எப்படி இல்லை என்று சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்திலே பேசுகிறபோது, மாநகராட்சித் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையென்று கேட்டிருந்தார்கள். அப்பொழுது நான் அந்தக் கூட்டத்திலே சொன்னது, எந்தெந்த அதிகாரங்கள் தேவை என்று கேட்கிறீர்கள், நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையிலே மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியதற்காக பல அதிகாரங்கள் தேவையானால், கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இருப்பதிலே பலவற்றை எடுப்பதற்கும் இந்த அரசு தயங்காது என்று குறிப்பிட்டேன். அதற்குத்தான் பல விவாதங்கள் எல்லாம் ஏற்பட்டன. இப்பொழுதும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மாநகராட்சிகளிலிருந்தும், நகராட்சிகளிலிருந்தும் அனுப்பியிருக்கிற தீர்மானங்களையும் பரிசீலனை செய்து, எந்தெந்த வகையிலே அதிகாரத்தைக் வழங்குவது, அல்லது குறைப்பது என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்றேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நகராட்சியைப் பொறுத்த மட்டில்,

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மொட்டையாகச் சொல்லக் கூடாது, 'தலைவர் அவர்களே' என்று ஆரம்பிக்க வேண்டும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு நகராட்சித் தலைவர் நான் தான் இருக்கிறேன்.

(குறுக்கீடு: இன்னும் சிலர் இருக்கிறார்கள்).

நகராட்சித் தலைவர்களுக்கு உள்ள அதிகாரம் இன்னும் குறைக்கப்படும் என்றார்கள். அவர்களுக்கு இப்பொழுது என்ன அதிகாரம் இருக்கிறது? இருக்கிற அதிகாரத்தையும் வருஷா வருஷம் பிடுங்கிக்கொண்டே வருகிறார்கள். இன்னும் குறைப்பது என்றால், நகராட்சியில் உட்காருவதற்குத்தான் அவருக்கு அதிகாரம் இருக்கப் போகிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இருக்கின்ற அதிகாரமே தெரியவில்லை என்று நகரசபைத் தலைவர் அவர்கள் சொல்வது வியப்பாக இருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: குறைவாக இருக்கிறது என்றுதான் சொல்கிறேன். அதுவும் குறைக்கப்பட்டால் என்ன ஆவது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இருக்கின்ற அதிகாரங்களே சரியாகப் புரியாமல் இருக்கிறபோது, இன்னும் அதிகாரங் களைக் கேட்பதுபற்றி வருத்தப்படுகின்றேன். எனவே அவர்கள் என்ன என்ன அதிகாரத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று அறிவிப்பார்களானால், அவற்றை நிறைவேற்ற வேண்டிய யோசனையையாவது நான் சொல்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கிற அதிகாரங்கள் மிகவும் சொல்ப அளவில் இருக்கின்றன. இந்த அதிகாரங்களைக் கொண்டு எந்தவிதமான சௌகரியமும் செய்ய முடியவில்லை. எனவே ஆணையாளர்களைப் பின் தொடர்ந்து போக வேண்டிய நிலைமை இருக்கிறது. நகராட்சித் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் எந்தக் காரி யத்தையும் செய்ய முடியாது. நகராட்சித் தலைவர்கள் எவ்வளவோ செலவு செய்து வருகிறார்கள். ஐந்து ரூபாய்க்கான செக்கில் கையெழுத்துப்போடக்கூட நகராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் 5 லட்சம் ரூபாய்வரை ஆணையாளர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர் களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அவர்களைப்பற்றி ஏதாவது குற்றங் களைச் சொல்ல வேண்டுமென்றால், 200 மைல் தாண்டி வர வேண்டும். எனக்கு நகராட்சித் தலைவர்களின் அதிகாரம் புரியாமல் இல்லை. இல்லையென்றால் 10 ஆண்டுகள் அதில் இருந்திருக்க முடியாது. அமைச்சர் அவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, பொதுவாக நகராட்சித் தலைவர்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து தலைவராக வருகிறார்கள். செலவு செய்துவிட்ட பிறகு, எவ்வளவு பணம் வருமென்று கணக்குப் பார்ப்ப தில்லை. வரவு-செலவுக் கணக்கைப் பார்க்க ஆணையாளர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் செலவு செய்யலாமென்று வரை யறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தில் ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால், அதற்குச் சட்டம் தேவையில்லை. விதி முறைகளைத் தளர்த்தி, அந்தக் காரியங்களைச் செய்யலாம். இப்போது அப்படித்தான் செய்கிறோம். உறுப்பினர் அவர்களுடைய நகராட்சியில்கூட குடி தண்ணீர் திட்டத்திற்காகக்

1973 நவம்பர் 23]

கொடுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கவனிப்பார்களேயானால், அது பல ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பது தெரியும். அதை யெல்லாம் அரசாங்கம் வழங்கியிருக்கிறது. தேவை ஏற்படும் நோத்தில் நகராட்சிகளுக்கு தனி நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் உதவி செய்து, தேவையான உத்தரவை இடுகிறது. அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கு பதிலாக 7 லட்சம் ரூபாய் கேட்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அளவுக்குத்தான் செலவு செய்யலாமென்று உத்தரவிடப்பட்டிருப்பதால், நிரந்தரமாக ஒரு 'ஸ்டேன்டிங் ஆர்டர்' போட முடியாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இங்கே உறுப்பினரவர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து, நகராட்சிக்கு வருவதைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து நகராட்சித் தலைவராக வருவதற்கு சட்டத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டத்தில் இடம் இருந்தால், ஒத்துக் கொள்ளுவார்கள். நடப்பதைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதற்கு விளக்கம் சொன்னேன். அதிகம் செலவு செய்து பழக்கப்பட்டவன் அல்ல நான்.

Rest House for Pilgrims

* 87. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any new Rest House has been constructed at Madurai for pilgrims; and

(*b*) if so, the details thereof?

யாத்திரிகர்களுக்கு ஓய்வு இல்லம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான ஓய்வு இல்லம் ஏதும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?